# செப்டம்பர் 18 ஒருவரி நடப்பு நிகழ்வுகள்

- கோழிக்கோட்டில் மனநிலை பாதித்தவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதை நோக்கமாகக் கொண்ட கேரளத்தின் முதல் திறன் கஃபே திறக்கப்பட்டுள்ளது.
- சர்வதேச தொலைத்தொடர்பு கழகம் (ITU) தெற்காசிய பகுதி அலுவலகம் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு மையம் புது டெல்லியில் நிறுவப்படும்.
- சைபர் அச்சுறுத்தலைக் குறைப்பதற்காக சைபர் பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கு மகாராஷ்டிரா அரசு நடவடிக்கை.
- திரிபுரா தலைநகரான அகர்தலாவில் விண்வெளி தொழில்நுட்ப இன்குபேசன் மையத்தை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) துவக்கியது.
- சிட்டகாங் மற்றும் மோங்க்லா துறைமுக பயன்பாட்டிற்காக இந்தியாவுடன் வங்கதேச அமைச்சரவை ஒப்பந்தம் செய்துள்ளது.
- மலிவான லித்தியம் பேட்டரிகளை IIT ஹைதராபாத் - சார்ந்த ஸ்டார்ட் அப் நிறுவனம் தயாரித்தது
- வெளிநாட்டுப் பங்குகள் முதலீட்டாளர்களுக்கான புதிய KYC விதிமுறைகளை இந்திய பங்குச் சந்தை மற்றும் செலாவணி வாரியம் (செபி) அங்கீகரித்துள்ளது.
- சஞ்சய் அகர்வால் - **புதிய செயலாளர், வேளாண்மை**
- ப்ரீதம் சிங் - **செயலாளர், பட்டியல் சாதியின் தேசிய ஆணையம் (NCSC)**
- வங்கதேத்தின் டினாஜ்புர் மாவட்டம் - இந்தியாவின் மேற்கு வங்காளத்தில் உள்ள சிலிகுரியை இணைக்கும் 130 கிலோ மீட்டர் குழாய்த்திட்டத்திற்கு இந்தியா மற்றும் வங்கதேசம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- ரூ. 9,100 கோடி மதிப்புள்ள கருவிகள் கொள்முதல் செய்வதற்கு பாதுகாப்பு கொள்முதல் குழு ஒப்புதல்
- சிரியாவின் மத்திய தரைக்கடல் கடலோரப் பகுதியில் இராணுவ விமானம் Il-20 காணாமல் போயுள்ளது.
- தெற்கு சீனக் கடலில் ஜப்பான் அதன் முதல் நீர்மூழ்கிக் கப்பல் பயிற்சியை நடத்தியது.
- யுஎஸ் கடற்படை அமைப்பின் 23 வது சர்வதேச கடற்சக்தி கருத்தரங்கின் பதிப்பில் கலந்துகொள்ள இந்தியக் கடற்படைத் தளபதி அமெரிக்காவின் ரோட் தீவிற்கு விஜயம் செய்தார்.
- தலாய் லாமா - **காந்தி குளோபல் பவுண்டேசனின் காந்திதர்ஷன் சர்வதேச விருது [கேரளா]**
- அருண் ஜேட்லி - **காந்திதர்சன் தேசிய விருது**
- பினராயி விஜயன் - **சிறந்த முதலமைச்சர் விருது**
- எம்.ஏ. யூசுப் அலி, பி.ஆர். ஷெட்டி மற்றும் பி. கோவிந்தன் - **வணிக விருதுகள்**
- ஜோசப் புளிகன்னெல் - **மனித நேயத்திற்கான விருது**

- கர்நாடகாவில் கக்கூன்களின் இ-ஏலத்திற்கு - **கர்நாடகா அரசின் இ-ஆளுமை விருது**.
- தேசப்பிதா மகாத்மா காந்தியின் 150-வது பிறந்த ஆண்டினை முன்னிட்டு, குடியரசுத் தலைவர் இலச்சினை மற்றும் இணையப் பக்கத்தை வெளியிட்டார்.
- மத்திய உள்துறை செயலாளர் ஸ்ரீ ராஜீவ் கௌபா பாதுகாப்பு அனுமதி வழங்குவதற்கான ஆன்லைன் 'இ-சஹாஜ்' போர்ட்டல் ஒன்றை அறிமுகப்படுத்தினார்.
- நல்ல ஆளுமையை மேம்படுத்துவதற்காக மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ஸ்ரீ. எஸ்.எஸ். அலுவாலியா C-DAC தகவல் ஊடக சேவையகத்தை (சிஜஎம்எஸ்) அறிமுகப்படுத்தினார்.

**Join Us on FB:**

**For English – Examsdaily** **For Tamil – Examsdaily Tamil**

**For WhatsAPP Group - Click Here**